## முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.

## அ.வ.எண். 118/2018

2025–ம் வருடம் செப்டம்பர் திங்கள் 16–ம் நாளன்று வாதி / பிரதிவாதி சாட்சியாக பி.சா.4–வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54 விதியின்படி 95–வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.ராமகிருஷ்ணன், உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்.** | **: அருணாச்சலம்** | **தொழில்** | **:** |
| **த/பெ.** | **:** | **வட்டம்** | **:** |
| **முகவரி** | **:** | **மதம்** | **:** |
| **ஜாதி** | **:** | **வயது** | **:** |

**67 வது பிரதிவாதி தரப்பு முதல் விசாரணை:–**

நான் இவ்வழக்கில் 67 வது பிரதிவாதி. என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன்.

பி.சா.3 ன் ஆதார் அடையாள அட்டை நகல் அசல் ஆவணத்துடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் பி.சா.ஆ.37 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

18.11.2008 தேதியிட் 67 வது பிரதிவாதியின் பெயரிலான கிரைய ஆவணம் எண்.7078/2008 சான்றிட்ட நகல் பி.சா.ஆ.38 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (கிரைய ஆவணத்தை குறியீடு செய்ய சொத்தின்

உரிமையாளர் இல்லாமல் வேறு ஒருவர் கிரையம் செய்ததால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. இந்த ஆட்சேபனை குறுக்குவிசாரணையின் போது கேட்க வேண்டியது என்பதால் ஆட்சேபனை நிராகரிக்கப்பட்டது.)

திருச்சி மண்டல நகர ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்கள் வழங்கிய வழக்கு சொத்தில் உள்ள மனைப்பிரிவுகள் அடங்கிய புல வரைபடம் ஆன்லைன் பதிவிறக்கம் பி.சா.ஆ.39 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (லேஅவுட் அப்புரவலினை உரிமையாளர் இன்றி பெறப்பட்டதால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. இந்த ஆட்சேபனை குறுக்குவிசாரணையின் போது கேட்க வேண்டியது என்பதால் ஆட்சேபனை நிராகரிக்கப்பட்டது.)

67 வது பிரதிவாதி சாந்தி பெயரிலான கூட்டு பட்டா ஆன்லைன் பதிவிறக்கம் பி.சா.ஆ.40 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (கூட்டுப்பட்டாவை குறியீடு செய்ய வாதி தரப்பு வழக்கறிஞர் பி.வா.சா.ஆ.38 கிரைய ஆவணம் அடிப்படையில் அமைந்ததால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. குறுக்குவிசாரணையின் போது கேட்க வேண்டியது என்பதால் ஆட்சேபனை நிராகரிக்கப்பட்டது.)

10.07.2025 தேதியிட்ட சென்னை உயர்நீதிமனற் மதுரை கிளை W.M.P.(MD)No.1323/2025-ன் உத்தரவு ஆன்லைன் பதிவிறக்கம் பி.சா.ஆ.41 ஆக

குறியீடு செய்யப்படுகிறது. 05.10.2018 தேதியிட்ட சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை W.P.(MD) No.10298/2018 ன் தடையாணை ஆன்லைன் பதிவிறக்கம் பி.சா.ஆ.42 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

சர்வே எண்.28/2–ன் கூகுள் எர்த் புகைப்படங்கள் பதிவிறக்கம் பி.சா.ஆ.43 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (மின்னணு சாதனத்தில் இருந்து நகல் எடுக்கப்பட்டதால் 65பி சான்று இல்லாததால் வாதி தரப்பு வழக்கறிஞரால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

**1 முதல் 65 மற்றும் 68 முதல் 115 வரை பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை.**

**(வாதி தரப்பு குறுக்கு விசாரணை கேட்டுக்கொண்டதற்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது. )**

**ஒம்/.K.H.இளவழகன்.,**
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.